


# தலைப்பு: மனவலிமை

**வழங்கியோர்**

கனவுகள் நினைவாக
உருமாறும் வரை
நீ !வேண்டும் !

கஷ்டங்கள் விலகி
சந்தோஷத்தை சந்திக்கும்வரை
நீ !வேண்டும் !

சோதனைகள் சாதனையாக
மாறி வெல்லும் வரை
நீ ! வேண்டும் !

சங்கடங்களை சமாளித்து
சாதனைப்படைக்கும் வரை
நீ ! வேண்டும் !

கவலைகள் களிப்பாக
மாறும் காலம் வரும்வரை
நீ ! வேண்டும் !

முயற்சித்து முன்னேற
மூச்சில் கலந்து இருக்க
நீ ! வேண்டும் !

முடியும் என்ற முரசு ஒலித்திட
நீ ! வேண்டும் !

சாதனை என்ற சங்கை முழங்கிட
சாமானியர்களுக்கு
நீ !வேண்டும் !

மண்மீது நாம் வெற்றி காண
ஒவ்வொருவரின் இதயத்துடிப்பு
ஒலியாக மாற
நீ ! வேண்டும் !

மண்ணுலகில் மனிதர்களின்
மனதிற்குள் மணக்கும் மலராக
நீ ! மலர வேண்டும் !

*கவிதாயினி சை. சபிதா பானு (காரைக்குடி)*

அறிவுக்கோல் கொண்டு
அடியெடுத்து வைக்க
திறவுக் கதவுகளாய்
திறமையை புகுத்திவிடு

சிறையில் கிடக்கும்
சிதைந்த உன்வாழ்வை
முறையாய்ப் போட்டு
முளைக்கவிடு விதையை

முழுவானம் பரவ
முகிலினமாய் முட்டிமோதி
கழுகினத்தைக் கலைத்து
கறைகளை துடைத்தெழு

வல்லினப் பூப்பறிப்போரை
மெல்லின நடையால்
வில்லினமாய் கூர்கொண்டு
வீரத்தோடு வேட்டையாடு

நெஞ்சிலொரு தீமூட்டு
நொந்துதணிய வெளிச்சமாகு
வஞ்சங்கொண்ட மானிடரை

வாரியணைத்து வாகைசூடு

செயலில் மனவலியோடு
செய்வதில் புதுமையோடு
புயலாக வந்தாலும்
புரிந்துவை உன்காலடியை.கடுகதியான
முடக்கத்தினால்.

*சரளா விமலராஜா*
*சுவீஸ்*

வென்றெடுக்க வேண்டுமென
கொண்டமன உறுதியோடு
தாண்டு தடைதாண்டு

மண்ணும் மலைமுடும்
மனதுவைத்தாலே
விண்ணுக்குச் செல்ல வித்திடும் பெருமுயற்சி

முன்னுக்குப் பின்
முரண்பட்ட சிந்தனையோ
கண்ணுக்கு முன்னே
கட்டாயம் காட்டும் வெற்றிதோழ்வி

முயலும் ஆமைதான்
முடிவில் வென்றதைப்போல்
விடா முயற்சியே
வெற்றியின் படிக்கட்டு

தொடமுடியா உயரத்தையும்
தொட்டுவிடத் துடிக்கும்
வெற்றியாளனுக்கே
கிட்டும் விருது

வட்ட வடிவமேதான்
வாழ்க்கை
புள்ளியில் தொடங்கி
மையப்புள்ளியில் முடிதுவே வீரியமுல்ல வெற்றி

மனவலிமையுள்ளவனே
மாற்றியமைப்பான்
சரித்திரத்தை
நீயும் நீங்கா சரித்திரமாவிய் மனவலிமையோடு

*கா பெரியசாமி*
*காரைக்குடி*